**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 307/2025 , Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சங்கர் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | வெங்கடபதி | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | மங்களமேடு காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 56 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.06.2026. | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 18.10.2024 ம் தேதி அன்று மங்களமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக முத்துக்கண்ணன் என்பவரும் முதல் நிலை காவலராக உதயகிருஷ்ணன் என்பவரும் சிறப்பு உதவி ஆய்வாளராக அன்னகாமு என்பவரும் பணியில் இருந்தார்கள். மேற்படி அன்னகாமு என்பவரும் உதகிருஷ்ணன் என்பவரும் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணி செய்வதாலும் வழக்கின் தன்மை கருதி இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி இருவருக்காகவும் கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் அன்னகாமு என்பவருடன் 18.10.2024 ம் தேதி அன்று தலைமை காவலர் முத்துக்கண்ணு மற்றும் உதயகிருஷ்ணண் ஆகியருடன் மதுவிலக்கு தடுப்பு சம்பந்தமாக மங்களமேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அத்தியூர், ஒகளூர், வடக்கலூர் ஆகிய இடங்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டபோது வடக்கலூர் நடுத்தெருவில் எங்களை பார்த்ததும் 60 வயது மதிக்கத்தக்க நபர் தப்பியோட முயன்றார், அவரை பிடித்த விசாரித்தபோது அவர் வைத்திருந்த பையில் 180ML அளவுள்ள Express Prandy 29 அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அவரை விசாரணை செய்தபோது தன்னுடைய பெயர் மணி என்றும், தன்னுடைய கணவர் பெயர் செங்கமலை என்றும், அவர் அரசு மதுபான பாட்டில்களை டாஸ்டாக் கடையில் இருந்து சிறுக சிறுக வாங்கி அந்த கடை மூடிய பின்னர் அதிக விலைக்கு அரசு அனுமதி இல்லாமல் விற்பதாக சொன்னவரை குற்ற காரணம் கூறி உதவி

DMC COURT, KUNNAM

ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் என் முன்னிலையிலும் முதல் நிலை காவலர் உதயகிருஷ்ணண் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக மேற்படி 29 Express prandy பாட்டில்களை கைப்பற்றி பின்னர் அழிக்கப்பட்டது. பின்னர் எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 410/2024 சட்டப்பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024 ன்படி வழக்கு பதிவு செய்தார். நிலையத்தில் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தவகையில் கடந்த 22.10.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையினை மேற்படி பிரிவுகளின் கீழ் உதவி ஆய்வாளர் எதிரி மீது தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்ற நாள் குறித்து பொதுநாட்குறிப்பேட்டினை உதவி ஆய்வாளர் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது பொது சந்தையில் எளிதாக கிடைக்கும் என்பதாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பதால் அங்கு உள்ள நபர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணையி**–இல்லை

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUDICIAL COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 490 /2025 , Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிகண்டன் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | சின்னபையன் | Calling | : | தலைமை காவலர் |
| Village | : | மங்களமேடு காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பநதட்டை | Age | : | 39/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.06.2026. | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 23.10.2025 ம் தேதி அன்று மங்களமேடு காவல் நிலையத்தில் காவலராக பணி செய்தபோது என்னுடன் முதல்நிலை காவலராக காசிராஜன் என்பவர் பணியில் இருந்தார். அன்றைய தினம் உதவி ஆய்வாளர் திரு. சங்கர் என்பவருடன் மதுவிலக்கு தடுப்பு சம்பந்தமாக மங்களமேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மங்களமேடு, நமையூர், முருக்கன்குடி, கார்குடி ஆகிய இடங்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டபோது பெருமத்தூர் காலனிதெருவில் எங்களை பார்த்ததும் 36 வயது மதிக்கத்தக்க நபர் தப்பியோட முயன்றார், அவரை பிடித்த விசாரித்தபோது அவர் வைத்திருந்த சாக்குபையில் 180ML அளவுள்ள Vorion Prandy 35 அரசு மதுபான பாட்டில்கள் மற்றும் ரூபாய் 200/-இருந்தது. அவரை விசாரணை செய்தபோது தன்னுடைய பெயர் மணி என்றும், அரசு மதுபான பாட்டில்களை டாஸ்டாக் கடையில் இருந்து சிறுக சிறுக வாங்கி அந்த கடை மூடிய பின்னர் அதிக விலைக்கு அரசு அனுமதி இல்லாமல் விற்பதாக சொன்னவரை குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் என் முன்னிலையிலும் முதல் நிலை காவலர் உதயகிருஷ்ணண் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக மேற்படி 35 Vorion Prandy பாட்டில்களை கைப்பற்றி பின்னர் அழிக்கப்பட்டது. அந்த **கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகசர் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.த.சா.ஆ 1 ஆவணத்தில் நான் 1-வதாக கையொப்பம் செய்துள்ளேன். பின்னர் எதிரி காவல் நிலையம் கொண்டு

DM COURT KUNNAM

வந்து சட்டப்பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act 2024 ன்படி வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்ற நாள் குறித்து பொதுநாட்குறிப்பேட்டினை உதவி ஆய்வாளர் என்னிடம் இருந்து கேட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரியிடம் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது பொது சந்தையில் எளிதாக கிடைக்கும் என்பதாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பதால் அங்கு உள்ள நபர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாணை**– இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM COURT, KUNNAM